European Union

## இணைந்த அறிக்கை

*ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ரொமேனியா தூதரகங்கள் மற்றும் ஐக்கிய இராஜ்ஜிய உயர் ஸ்தானிகராலயம், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து தூதரகங்கள் ஆகியவற்றுடனான உடன்படிக்கையின் பிரகாரம் பின்வரும் அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு வெளியிடுகின்றது.*

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களை தொடர்ந்து இடம்பெற்ற அண்மைய சமூக வன்முறைகள் தொடர்பில் நாம் அதிகளவு கரிசனை கொண்டுள்ளோம். இந்த வன்முறைகளுடன் தொடர்புபட்டவர்களை கைது செய்தமையை நாம் வரவேற்பதுடன், சட்டவிதிமுறையை எவ்வேளையிலும் பேணுமாறு அரசாங்கத்துக்கு நாம் கோரிக்கைவிடுப்பதுடன், சமூக வன்முறைகள் இடம்பெறும் சகல சந்தர்ப்பங்களிலும் சட்டம் குற்றச் செயல்களை புரிந்தவர்கள் மற்றும் தூண்டியவர்கள் மேல் சமமான முறையில் பிரயோகிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் கோரிக்கைவிடுக்கின்றோம்.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அண்மைக் காலங்களில் பயங்கரவாதத் தாக்குதல்களையும் வெறுப்பு குற்றங்களையும் அனுபவித்துள்ளன. இவற்றின் காரணமாக சமூகங்களில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் நீண்ட கால அடிப்படையில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றமை நாட்டின் சமூக பரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

தெளிவான தலைமைத்துவம் மற்றும் வெறுப்புணர்வு மற்றும் வன்முறையை நிராகரிக்கும் செயற்பாடுகள் போன்றன மிகவும் முக்கியத்துவமானவை என்பதுடன், நாட்டின் குடிமக்கள் அனைவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்து, அவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அரசாங்கத்தை நாம் ஊக்குவிக்கின்றோம்.

தொடர்ந்து வன்முறை கிளர்ச்சியை தூண்டுதல் அத்துடன் அவநம்பிக்கையை ஏற்படுத்தல் என்பவற்றிற்கு எதிராக குரலெழுப்புமாறு நாம் சகல அரசியல், சமய மற்றும் இதர சமூக தலைவர்களிடமும் கோரிக்கைவிடுப்பதுடன், சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கைவிடுக்கின்றோம்.

தவறான தகவல்களை பரப்பி, மேலும் வன்முறைகளை தூண்டாமல் இருக்க வேண்டியது நாட்டின் ஊடகங்கள் மற்றும் குடிமக்கள் ஆகியோரின் பொறுப்பு என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

கொழும்பு, 16 மே 2019

###

தொடர்புகளுக்கு:
அரசியல், வர்த்தக மற்றும் தொடர்பாடல் பிரிவு
இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு
தொ.பேசி: + 94 11 2674413-4